திராவிட அரசியல் கட்சிகள் கொள்கைகளைக் கைவிட்டது ஏன்?

மாற்று என்ன?

டாக்டர் மு. தெய்வநாயகம் எம்.ஏ., பிஎச்.டி.

திராவிட ஆன்மீக இயக்கம்,
278, கொன்னூர் நெடுஞ்சாலை, அயன்புரம்,
சென்னை – 600 023. ☎ : 644 9032, 644 3842

Web site : http://www.geocities.com//Athens/Ithaca/1412
Email : dravidasamayam@geocities.com

14.05.1999

விலை ரூ.5/-

வாழ்த்து

"தந்தை பெரியார், தத்துவங்களை – கொள்கைகளை இந்த நாட்டிற்கு வழங்குவதற்காகவே வந்தார். அதை யாராவது நடைமுறைப்படுத்த வேண்டும். அண்ணாதான் நடைமுறைப் படுத்தினார்....... இதன் பரிணாம வளர்ச்சியாகப் புரட்சித்தலைவர், 'திராவிட மதம்' – 'திராவிட சமயம்' என்று எழுதிவிட்டார். எதிலே? சென்சஸ் கணக்கெடுப்பிலே.

அதற்குப் பிறகு அதைப் பற்றிய விரிவான பிரச்சாரத்திலோ, முயற்சியிலோ ஈடுபடவில்லை. அதைப் பல ஆண்டுகள் கழித்து இன்று நம் டாக்டர் மு. தெய்வநாயகம் தொடங்கியிருக்கிறார்.....

டாக்டர் மு. தெய்வநாயகம் 'திராவிட சமயம்' என்ற பெயரிலாவது தமிழரை – மனிதரை ஒன்று சேர்க்க முடியுமா என முயற்சிக்கின்றார். அவருடைய முயற்சி வெற்றி பெற வேண்டும் என வாழ்த்துகின்றேன்".

மாண்புமிகு முன்னாள் அமைச்சர் **ஆர்.எம். வீரப்பன்**
(பெரியார், அண்ணா, எம்.ஜி.ஆர். ஆகிய
மூவருடனும் அதிக நெருக்கமாக இருந்தவர்)
18.12.1998

திராவிட அரசியல் கட்சிகள் கொள்கைகளைக் கைவிட்டது ஏன்?

மாற்று என்ன?

திராவிட அரசியல் கட்சிகள் :

திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் போன்ற பல பெயர்களில் திராவிடர்களுடைய முன்னேற்றத்திற்காக அரசியல் கட்சிகள் தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகின்றன. மேலே கூறப்பட்டுள்ள யாவும் அரசியலில் ஈடுபட்டு, அதிகாரத்தைக் கைப்பற்றி திராவிடர்களுடைய முன்னேற்றத்திற்காகப் பாடுபட வேண்டும் என்ற நோக்கில் அமைக்கப்பட்ட அரசியல் கட்சிகள்.

இன முன்னேற்றம் :

எந்தவோர் இனமும் தான முன்னேற வேண்டும் என்று நினைப்பதில் தவறு ஒன்றும் இல்லை. அதைப் போலவே திராவிடர்களும் முன்னேற வேண்டும் என்று திராவிட இனத்தைச் சார்ந்த பெரியவர்கள் நினைப்பது நியாயமானதே. இந்தியா முழுவதிலும் உள்ள இனங்களில் திராவிடர்கள் முன்னேற வேண்டும் என்ற நோக்கில் அதையே தலைப்பாகக் கொண்டு அரசியல் கட்சி தமிழகத்தில் அமைக்கப்பட்டுள்ளதைப் போன்று இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இன முன்னேற்றத்தைக் குறிக்கும் இனப்

பெயருடன் அரசியல் கட்சி எதுவும் இதுவரை உருவாகவில்லை.

அப்படியானால் தமிழகத்தில் மட்டும் திராவிட இன முன்னேற்றத்திற்காக, 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்ற பெயரில் அரசியல் கட்சி உருவாகக் காரணம் என்ன? என்ற கேள்வி இப்பொழுது எழுகிறது.

தமிழர் - திராவிடர் :

'தமிழர்' என்ற சொல்லை உச்சரிக்க இயலாதவர்களால் அச்சொல் (தமிழர் – திரமிளர் – திரமிடர்– திரவிடர் – திராவிடர்) 'திராவிடர்' என்று உச்சரிக்கப்பட்டது. 'தமிழர்' என்பது 'தமிழ்மொழியைப் பேசுகின்றவர்' என்பதைக் குறிக்கிறது. 'திராவிடர்' என்பது 'தமிழ் மொழியைப் பேசிய தமிழ் மக்கள்' என்ற பொருளில் தமிழ் இனத்தைக் குறித்தது. உலக வரலாற்று ஆசிரியர்களால் 'தமிழ் இனம்' என்ற பெயர் 'திராவிட இனம்' என்று குறிக்கப்படுகிறது.

திராவிட இந்தியா :

தமிழ் பேசுகிறவர்கள் எல்லோரும் தமிழைப் பேசத் தெரிந்த காரணத்தாலேயே திராவிட இனத்தவர் ஆகிவிட முடியாது. அவர் தம்மைத் தமிழ் பேசுகிறவர் என்று உரிமை பாராட்டலாம். அழைத்துக் கொள்ளலாம். ஆனால் 'திராவிடர்' என அழைத்துக் கொள்ளுவதற்கு இன உரிமை வேண்டும். அவர், தான் 'திராவிடர்' என்று இன உரிமை பாராட்ட இயலாது. (ஆங்கிலம் பேசத் தெரிந்தவர்கள் எல்லோரும் ஆங்கிலேயர் ஆகி விடமுடியாது).

திராவிட இன நாகரிகம் இன்றைக்கு 4000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையானது என்பதை,

சிந்துவெளி புதைபொருள் ஆராய்ச்சிகள் வெளிப்படுத்துகின்றன. இந்தியா முழுவதும் வாழ்ந்து வந்த மக்கள் திராவிட இன மக்கள் என்பதை வரலாறு நமக்குப் புலப்படுத்துகிறது.

தெய்வீக இனம் :

சிந்துவெளி திராவிட வழிபாட்டிலிருந்தே உலக மதங்கள் எல்லாம் உருவாகியுள்ளன என்னும் வரலாற்று உண்மை அண்மைக்கால ஆய்வுகளால் வெளிப்படுத்தப் பட்டுள்ளன. உலக மொழிகளில் தமிழ் மொழியில் மட்டுமே உயிர், மெய், உயிர்மெய் என்று ஆன்மீக தத்துவ அடிப்படையில் தமிழ் எழுத்துகளுக்குப் பெயர்கள் அமைந்துள்ளன. பொருள் இலக்கணம் என்ற தெய்வீக ஆன்மீக இலக்கணம் உலக மொழிகளில் தமிழ் மொழிக்கு மட்டுமே இருக்கிறது. ஆகவே, திராவிட இனம் ஒரு தெய்வீக இனம் என்பது வரலாற்று உண்மையாகும்.

சூத்திரர், பஞ்சமர் :

மிகச் சிறந்த நிலையில் இருந்த திராவிட இன மக்கள் இடைக்காலத்தில் வேற்றவர் படையெடுப்பால் துன்பத்திற்குள்ளாயினர். இந்தியாவிலுள்ள திராவிட இன மக்கள் வேற்றவர்களால் 'சூத்திரர்' என்றும் 'பஞ்சமர்' என்றும் பிரிக்கப்பட்டுள்ளனர். சூத்திரர்களில் பெரும்பகுதியினர் இன்று பிற்படுத்தப்பட்ட, (B.C.) மிகவும் பிற்படுத்தப்பட்ட (M.B.C.) மக்கள் என்று குறிக்கப்படுகின்றனர். பஞ்சமர்கள் செட்யூல்டு வகுப்பினர் (SC) என்று குறிக்கப்படுகின்றனர். இந்திய மக்களில் 88% வாழும் சூத்திரர், பஞ்சமரில் தென் இந்திய மக்கள் திராவிட மொழிகளைப் பேசும்

திராவிடர்களாக வாழுகின்றார்கள். வட இந்திய மக்கள் திராவிட மொழிகளை மறந்த திராவிடர்களாக விளங்குகின்றனர்.

தமிழ்மொழி :

தென் இந்தியாவில் பேசப்படும் திராவிடமொழிகளில் அடிப்படையான திராவிட மொழி தமிழ்மொழி ஆகும். தமிழ் மொழியிலுள்ள இலக்கியங்கள் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையானவையாகும். இன்றும் அவை தமிழ் மக்களால் பயிலப்பட்டு வருகின்றன.

இந்திய மொழிகளில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக, பேச்சு வழக்கில் இருக்கும் ஒரே மொழி தமிழ்மொழி மட்டுமே ஆகும். இந்தியாவில் பேச்சு வழக்கில் இருக்கும் மற்ற மொழிகள் அனைத்தும் தமிழுக்குப் பின்னால் உருவான மொழிகளாகும். இந்தியாவில் பேச்சு வழக்கிலுள்ள மற்ற மொழிகளின் இலக்கியங்கள் யாவும் தமிழுக்கு மிகவும் பிற்பட்ட காலங்களைச் சார்ந்தவையே ஆகும்.

விடுதலைப் போராட்டங்கள் :

ஆனால், தமிழ் மொழியும் தமிழ் மக்களும் அதாவது திராவிட இன மக்களும் இன்று வேற்றவர்களால் அடிமைப்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

1) தமிழர்களுடைய கோவில்களில் தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டும் என்று தமிழ் பக்தர்கள் போராடிக் கொண்டு இருக்கிறார்கள்.

2) தமிழ்நாட்டுப் பள்ளிகளில் முதல் 5 வகுப்புகளுக்கு, தமிழ் குழந்தைகளுக்குத் தமிழ் மொழியில் பாடம் கற்றுக்

கொடுக்க வேண்டும் என்று தமிழ் தலைவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

3) இந்திய மொழிகளில் தமிழுக்கும் ஆட்சிமொழி அந்தஸ்து வேண்டும் என்று தமிழ் அறிஞர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

4) தமிழ் இன மக்கள் மற்ற இனத்தவர்களைவிட கீழ்சாதி யானவர்கள் அல்லர் என்று தன்மானமுள்ள தமிழர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே, தமிழர்கள் அல்லது திராவிட இன மக்கள் வேற்று மொழியாளர்களுக்கும், வேற்று இனத்தவர்க்கும் அடிமைப்பட்டிருக்கின்ற நிலை இந்தியா விடுதலையடைந்து 50 ஆண்டுகள் ஆனபிறகும் மாறவில்லை.

ஆரியர் ஓர் இனம் அல்லர் :

வேற்றவர் என்பவர் யார்? என்ற கேள்வி இப்பொழுது எழுகிறது. இந்திய மக்களை வரலாற்று ஆசிரியர்கள் இருபெரும் பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். ஒன்று திராவிட இனம். மற்றொன்று ஆரிய இனம். திராவிட இனத்தை ஆரிய இனம் அடிமைப்படுத்தியிருக்கிறது. அதன் விளைவுதான் மேலே கூறப்பட்டிருக்கின்ற நான்கு விதமான போராட்டங்கள்.

ஆரியர் என்பது தனி ஓர் இனப்பெயர் என்ற எண்ணத்தில் இன ஆராய்ச்சியில் ஈடுபட்ட அறிஞர்கள் எல்லோரும் தோல்வியே கண்டுள்ளனர் என்பதற்கு வரலாற்று ஆதாரங்கள் ஏராளமாக உள்ளன.

திராவிடர் என்பது தமிழ் மொழியை – திராவிட மொழியைப் பேசி வந்த திராவிட இனத்தவர் என்பதற்கு

வரலாற்று ஆதாரங்கள் ஏராளமாக உள்ளன. ஆனால் ஆரியர் என்ற சொல் தனி ஓர் இனத்தையோ, தனி ஒரு மொழியைப் பேசிவந்த மக்களையோ குறிப்பிடவில்லை என்பதற்கு இப்பொழுது வரலாற்று ஆதாரங்கள் ஏராளமாக வெளிவந்துள்ளன.

சமஸ்கிருதம் ஆரிய மொழியா? :

அப்படியானால் ஆரிய மொழி என்று அழைக்கப்படும் சமஸ்கிருதம் ஆரிய இனத்தவருடைய மொழி இல்லையா? என்ற கேள்வி எழலாம். ஆரிய இனம் என்று ஓர் இனமே இல்லை என்று கூறிவிட்ட பிறகு ஆரிய இனத்திற்கென்று ஒரு மொழி எவ்வாறு இருக்க இயலும் என்பதே பதில் கேள்வியாக அமைந்து விடுகிறது.

ஆரியர்கள் வெளி நாட்டிலிருந்து வந்தார்கள் என்றால் அவர்கள் எந்த நாட்டிலிருந்து வந்தார்கள்? அந்த நாட்டில் சமஸ்கிருதம் பேசப்பட்டதா? அப்படி பேசப்பட்டதென்றால் ஆதாரங்கள் இருக்கின்றனவா? என்னும் கேள்விகள் எழுகின்றன.

சமஸ்கிருதம் கி.மு. முதல் நூற்றாண்டிற்கு முன்னர் உலகில் எங்குமே பேசப்பட்டதற்கான எந்த ஆதாரமும் இதுவரை கிடைக்கவில்லை. இந்தியாவில் சமஸ்கிருதம் பொதுமக்கள் மொழியாக எந்த காலத்திலும் எங்குமே பேசப்படவில்லை என்பதை ஆராய்ச்சி அறிஞர்கள் அனைவரும் ஒருமுகமாக ஏற்றுக் கொள்கிறார்கள். சமஸ்கிருதம் என்ற சொல்லுக்கு நன்றாக செய்யப்பட்டது என்பதே பொருளாகும். செய்யப்பட்டது பொம்மையாக இருக்க முடியுமே தவிர குழந்தையாக முடியாது. ஆகவே,

செய்யப்பட்ட மொழி 'Code Langugae' என்பதைப் போன்று குறிப்பிட்ட ஒரு காரணத்திற்காக, குறிப்பிட்ட மக்களால், குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட ஒரு நாட்டில், அறிஞர்களால் உருவாக்கப்பட்ட மொழி சமஸ்கிருதமாகும். ஆகவே, இது அறிஞர்களுக்குரிய மொழியே தவிர பொதுமக்களுக்குரிய மொழி அன்று.

சமஸ்கிருதத்தை உருவாக்கிய அறிஞர்கள் யாவர் ? :

சமஸ்கிருதத்தில் இராமாயணத்தை எழுதிய வால்மீகி, சமஸ்கிருதத்தில் மகாபாரதத்தை எழுதிய வேத வியாசர், சமஸ்கிருத காவியங்களை உருவாக்கிய காளிதாசர், நாடோடி வழிபாட்டுப் பாடல்களைத் தொகுத்து, எழுத்துருவம் கொடுத்து, வேதம் என்ற ஒன்றை சமஸ்கிருதத்தில் உருவாக்கிய வேதவியாசர் ஆகிய அனைத்து அறிஞர் பெருமக்களும் திராவிட இனத்தைச் சார்ந்த அறிஞர் பெருமக்களேயன்றி ஆரிய இனத்தைச் சார்ந்தவர்கள் அல்லர் என்பது இங்கு எண்ணிப் பார்க்க வேண்டிய ஒன்றாகும்.

திராவிடராகிய வேத வியாசர் சமஸ்கிருதத்தில் எழுதிய பிரம்ம சூத்திரத்திற்கும் அவர் சமஸ்கிருதத்தில் எழுதிய மகாபாரதத்தின் ஒரு பகுதியாகிய பகவத் கீதைக்கும் சமஸ்கிருத மொழியில் அவர் தொகுத்த உபநிஷத்துகளுக்கும் உரை எழுதிய உரையாசிரியர்களே சங்கரர், இராமானுசர், மாத்துவர் போன்ற ஆரிய பிராமணர்களாவர்.

செயற்கை மொழி :

ஆகவே, சமஸ்கிருதம் இந்திய திராவிட அறிஞர்களின் பொதுமொழியாக, திராவிட அறிஞர்களால் நன்றாகச்

செய்யப்பட்ட திராவிட இனத்தவர்க்குரிய செயற்கை மொழியேயன்றி ஆரிய இனத்திற்கும் அதன் உருவாக்கத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. ஏனென்றால் ஆரிய இனம் என்ற ஓர் இனமே இல்லை.

உருவாக்கிய காலம் :

சமஸ்கிருத மொழி இருந்தது என்பதற்கான முதல் ஆதாரம் கி.பி.2 ஆம் நூற்றாண்டிலிருதுதான் நமக்குக் கிடைக்கிறது.

கி.மு.3 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அசோகர் தம்முடைய கொள்கைகளை, தம்முடைய ஆட்சிக்குட்பட்ட நாடுகளில் இந்திய மொழிகளிலும், அரமேயம், கிரேக்கம் போன்ற வேற்று மொழிகளிலும் கற்பாறைகளில் பொறித்தார். அவர் காலத்தில் சமஸ்கிருதம் என்ற ஒரு மொழி இருந்திருக்குமானால் அந்த மொழியில் தம் கொள்கையைக் கற்பாறையில் பொறியாமல் இருந்திருப்பாரோ என்ற கேள்விக்கு, சமஸ்கிருதம் கி.மு.வில் இருந்தது என்று நம்புகின்ற எவராலும் விடை கொடுத்தல் இயலாது.

அப்படியானால் ஆரியர்கள் என்பவர்கள் யாவர்? ஆரியர்களின் முப்பிரிவுகளான பிராமணர், சத்திரியர், வைசியர் என்பவர்கள் யாவர்? என்னும் கேள்விகள் எழுகின்றன.

பிராமணர் - ஒரு சாதிப் பெயரா? :

ஆரியர்கள் என்பது ஓர் இனப்பெயர் இல்லை என்று நாம் கூறியது போன்றே பிராமணர் என்பதும் ஒரு சாதிப் பெயர் இல்லை என்பது வரலாற்று உண்மையாகும்.

சிவன், விஷ்ணு, பிரமா என்ற மும்மூர்த்திக் கோட்பாடு கி.பி. முதல் நூற்றாண்டிற்குப் பின்னர் இந்தியாவில் பரவியதாகும். கிறிஸ்துவிற்கு முற்பட்ட நூற்றாண்டுகளில் சிவன், விஷ்ணு, பிரமா என்ற மும்மூர்த்திக் கோட்பாடு இருந்ததற்கான எந்த ஆதாரமும் இல்லை.

சிவனை வணங்குகிறவர்கள் சைவர்கள்; விஷ்ணுவை வணங்குகிறவர்கள் வைணவர்கள்; பிரமனை வணங்குகிறவர்கள் பிராமணர்கள். எனவே, பிராமணர் என்பது ஒரு மதப்பெயராகும்.

'பிராமணர்' என்பது ஓர் இனப் பெயரோ, சாதிப்பெயரோ அன்று. அது ஒரு மதப்பெயர் என்பதை இங்கு வற்புறுத்திக் கூறியாக வேண்டியதிருக்கிறது.

ஆரியர்களுக்கு உரியது என்று சொல்லப்படுகின்ற வேதங்களில் சிவன், விஷ்ணு, பிரமா என்று சொல்லப்படுகின்ற **மும்மூர்த்திக் கோட்பாடோ**, சிவன், சக்தி, விஷ்ணு, குமரன், பிள்ளையார், ஐயப்பன் என்ற **சிவக்குடும்பப் பெயர்களோ** கிடையாது. அவதாரக் கோட்பாடும், கோவில் வழிபாடும் வேதங்களில் இல்லை. இவை யாவும் திராவிடர்களின் ஆகமங்களுக்கு உரியவை. வேதங்களுக்கு மாறானவை.

ஆகவே, பிராமணர் என்ற பெயர் சைவர், வைணவர் என்பதைப் போன்று சிவக்குடும்ப சமயங்களில் ஒன்றான பிரமனை வணங்கும் பிராமணர்கள் எனும் பொருளில் திராவிட மதங்களில் ஒரு பிரிவினரைக் குறிக்கின்றது. இப்பெயர் கி.பி. முதல் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதே அன்றி கி.மு. முதல் நூற்றாண்டிற்கு முற்பட்டது அன்று.

சூழ்ச்சியால் கவர்ந்தனர் :

'பிராமணர்' என்ற மதப் பெயரைத் தங்கள் சாதிக்குக் கவர்ந்து கொள்ள ஆதிசங்கரராகிய ஆரியர் உருவாக்கிய திட்டமே அத்வைதக் கொள்கையாகும்.

அத்வைதக் கொள்கையை, தம்முடைய மூலநூலிலிருந்து அவர் உருவாக்கவில்லை. திராவிடராகிய வேதவியாசரின் நூல்களுக்குத் தாம் எழுதிய தவறான விளக்கங்களின் மூலம் உருவாக்கினார். இது கி.பி.9ஆம் நூற்றாண்டிலிருந்து இந்திய மக்களை மிகவும் பாதித்தது.

இந்திய திராவிட மக்களின் திராவிட ஆட்சியையும் திராவிட மதங்களையும் ஆரியப் பிராமணர்கள் சூழ்ச்சியான முறையில் அடிமைப்படுத்தினார்கள் என்பது வரலாற்று உண்மையாகும்.

ஆரியர் யார்? :

அப்படியானால் 'ஆரியர்' என்பது யாரைக் குறிக்கிறது என்ற கேள்வி இப்பொழுது எழுகிறது.

வெளிநாட்டிலிருந்து இந்தியாவிற்குள் வந்த வேற்றவர்களில் மதத்தோடு வந்தவர்கள் அந்தந்த மதங்களின் பெயர்களால் குறிக்கப்படுகின்றனர். (யூதர்கள், சொராட்டிரர்கள், சீரியக் கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள், ஐரோப்பியக் கிறிஸ்தவர்கள்). மதம் இல்லாமல் வெளிநாட்டிலிருந்து இந்தியாவின் மீது படையெடுத்து வந்து இந்தியப் பகுதிகளைப் பிடித்து ஆண்ட வேற்றவர்களான 1) பாரசீகர்கள் 2) கிரேக்கர்கள் 3) சகர்கள் 4) குஷானர்கள் 5) ஹூணர்கள் ஆகியோரும், 6) படையெடுத்து வராமல் வணிகத்திற்காக இந்தியாவிற்கு வந்த ரோமர்களும் ஆகிய

ஆறு பிரிவினருக்கும் இந்தியாவில் உருவான பொதுப்பெயரே 'ஆரியர்கள்' என்பது ஆகும். இந்திய மக்களுக்கும் இவர்களுக்கும் இடையே உள்ள பொதுவேறுபாடு நிறத்தால் ஏற்பட்டதாகும். அந்த நிறவேற்றுமையை அடிப்படையாகக் கொண்டே வருணம் (நிறம்) ஆசிரமத் தருமம் (வருணாசிரமதருமம்) இடைக்காலத்தில் உருவாக்கப்பட்டது. அதுவே சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கை ஆகும்.

திராவிடர்களில் மேல்சாதி கீழ்சாதி :

ஆரியர்களை எதிர்த்தவர்கள் பகைவர்களாகக் கருதப்பட்டு தீண்டத்தகாதவர்களாக–பஞ்சமர்களாக்கப் பட்டனர். ஆரியர்களை எதிர்க்க இயலாமல் வளைந்து கொடுத்தவர்கள் அடிமைகளாக் கப்பட்டு – சூத்திரர் களாயினர். ஆரியர்களை எதிர்த்த அளவுக்குக் கீழ்சாதி நிலை கொடுக்கப்பட்டது. ஆரியர்களை ஆதரித்த அளவுக்கு மேல்சாதி நிலை கொடுக்கப்பட்டது. அதாவது, தியாகப் பரம்பரையினர் கீழ்சாதி ஆயினர். துரோகப் பரம்பரையினர் மேல்சாதி ஆயினர்.

அந்த சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கைக்கு நியாயம் கற்பித்து அந்நியர்களின் அரசியல் சட்டத்துக்கு ஆன்மீக வேஷம் கொடுத்தவரே ஆதி சங்கரர் ஆவார். அவர் கொடுத்த ஆன்மீக வேஷத்தின் இன்றைய பெயர் 'இந்துத்துவம்' என்பதாகும்.

ஆகவே, ஆரியர்களுக்கு மதம் என்ற ஒன்று கிடையாது. 'ஆரியர்' என்பது தனிப்பட்ட ஓர் இனத்தைக் குறிக்காது. ஆரியர்களுக்கென்று ஒரு தனிமொழியும் கிடையாது.

படையோடு வந்து இந்தியாவைப் பிடித்து ஆண்ட, மதம் இல்லாத வேற்றவர்களுடைய பொதுப் பெயரே 'ஆரியர்' என்பது ஆகும். வெளிநாட்டிலிருந்து இந்தியாவிற்குள் வந்த இஸ்லாமியர்களும், ஐரோப்பியர்களும் நமக்கு எவ்வாறு அந்நியரோ அவ்வாறே ஆரியர்களும் நமக்கு அந்நியர்களே. இஸ்லாமியர்களும், ஐரோப்பியர்களும் மதத்தோடு வந்த காரணத்தால் நம்முடைய மதங்களிலிருந்து அவர்கள் வேறுபட்டு நிற்கின்றனர். ஆனால் மதம் இல்லாமல் வெளிநாட்டிலிருந்து வந்த அந்நியர்களாகிய ஆரியர்கள் நம்முடைய மதங்களை அடிமைப்படுத்தி இன்றுவரை நம்முடைய மதத்தை அவர்களுடைய மதமாக ஏமாற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

திராவிடர்களை விடுவிக்க :

ஆரியர்களுடைய இந்த ஏமாற்றிலிருந்து, அவர்களுடைய அடிமைத்தனத்திலிருந்து, தமிழர்களை – திராவிடர்களை விடுவித்து அவர்களை முன்னேற்றுவதற்காக ஏற்பட்ட கழகமே திராவிட முன்னேற்றக் கழகம் ஆகும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கியவர் அறிஞர் அண்ணா என்பதை நாம் எல்லோரும் அறிவோம். அறிஞர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்குவதற்கு முன்னர் தந்தை பெரியாருடைய திராவிடர் கழகத்தில் பொதுச் செயலாளராக இருந்தார். திராவிடர் கழகத்தை உருவாக்கியவர் தந்தை பெரியார் என்பதை நாம் அறிவோம். தந்தை பெரியார் திராவிடர் கழகத்தை உருவாக்குவதற்குக் காரணமாய் இருந்த

வரலாற்று நிகழ்ச்சிகள், ஆரிய பிராமணர்கள் திராவிடர்களை அடிமைப்படுத்தி, இழிவுபடுத்தி நசுக்கியதாலேயே ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் அவருடைய வாழ்க்கையில் ஆரியர் செய்த அவமானங்களை, இழிவுகளைச் சந்திக்க நேரிட்டபோது அவருடைய தன்மான உணர்வு பீறிட்டெழுந்து சுயமரியாதையைக் காத்துக்கொள்ள குரல் கொடுக்கத் தொடங்கினார்.

ஆரியர்கள் திராவிடர்களை இனத்தாலும், சாதியாலும் இழிவுபடுத்தி, அவமானப்படுத்தி நசுக்குவதை எதிர்த்து திராவிட இனத்தை விடுவிக்க இனப்பெயரால் ஒரு கட்சியை உருவாக்கினார். திராவிட இனத்தவர்களை ஒன்று திரட்டி ஆரியர்களின் பிடியிலிருந்து திராவிடர்களை விடுவிக்க திராவிடர் கழகத்தை அவர் உருவாக்கினார்.

திராவிடர் கழகக் கொள்கைகள் :

1) திராவிடர்களை அடிமைப்படுத்தியிருக்கும் ஆரியர்களின் அடிமைத்தளையை ஒழிப்பது.

2) திராவிடர்களை இழிவுபடுத்தும் ஆரியர்களின் முதல் பிரிவினரான பிராமணர்களை எதிர்ப்பது, பிராமணர்களின் சூழ்ச்சிகளை முறியடிப்பது.

3) திராவிடர்களை இழிவுபடுத்த ஆரிய பிராமணர்கள் தங்களுக்கு ஆயுதமாகப் பயன்படுத்தும் இந்து மதத்திலிருந்தும், இந்துமதத்தின் மூடநம்பிக்கைகளிலிருந்தும் திராவிடர்களை விடுவிப்பது.

4) இந்துமதக் கடவுள் நம்பிக்கையின் வழி ஆரியப் பிராமணர்கள் திராவிடர்களை அடிமைப்படுத்தியுள்ள

படியால் திராவிடர்களை அடிமைப்படுத்தப் பயன்படும் இந்துமதக் கடவுள் நம்பிக்கையிலிருந்து திராவிட மக்களை விடுவிப்பது.

மேலே கூறப்பட்டுள்ள நான்கு கொள்கைகளும் திராவிடர் கழகத்தின் அடிப்படைக் கொள்கைகளாய் அமைந்தன. திராவிடர் கழகத்தை, தந்தை பெரியார் ஓர் அரசியல் கட்சியாக உருவாக்கவில்லை. ஆரியர்கள் இந்தியா முழுவதும் பரவியிருந்து, இந்தியப் பொருளாதாரத்தையும், இந்திய மதத்தையும், இந்திய அரசியலையும் தங்கள் கோரப்பிடிக்குள் வைத்திருக்கின்ற காரணத்தால் வெறும் அரசியல் கட்சியாகத் தென்னகத்தில் உருவாகி அரசியல் அதிகாரத்தைப் பிடித்து ஆரியப் பிடியிலிருந்து திராவிடர்களை விடுவிக்க இயலாது என்பதை, பெரியார் நன்கு அறிந்திருந்தார். ஆகவே, அரசியல் பதவி ஆசை கொண்ட எவரும் திராவிடர் கழகத்தை அணுகாதவாறும் திராவிடர் கழகத்தைச் சார்ந்தவர்கள் எவ்வித தியாகத்திற்கும் ஆயத்தமாய் இருக்கும் வண்ணமும் பெரியார் அக்கட்சியை உருவாக்கினார்.

தந்தை பெரியாரின் இன விடுதலைக் கொள்கை அறிஞர் அண்ணாவை ஈர்த்தது. அவர் திராவிடர் கழகத்தில் சேர்ந்தார். அதன் பொதுச் செயலாளராகவும் உயர்த்தப்பட்டார்.

அண்ணா :

ஆனால், தந்தை பெரியாரின் கடவுள் மறுப்புக் கொள்கையும் அரசியலில் புக வேண்டாம் என்ற கொள்கையும் அறிஞர் அண்ணாவிற்கு உடன்பாடாக இல்லாமல் ஆனபொழுது, கடவுள் மறுப்புக்

கொள்கையிலிருந்து வேறுபட்டு உலக மனித சமுதாய ஆன்மீகக் கொள்கையான 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று குரல் கொடுக்கும் அரசியல் கட்சியை, திராவிட முன்னேற்றக் கழகம் என்ற தலைப்பில் உருவாக்கினார். பிராமணர்களை எதிர்த்த நிலையிலிருந்து வளர்ந்து பிராமணீயத்தை எதிர்க்கும் நிலையை அடைந்தார்.

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற கொள்கையின் வழி சாதி எற்றத்தாழ்வற்ற நிலையில் ஒரே கடவுளை வணங்கும் இஸ்லாமிய, கிறிஸ்தவ அன்பர்களுடன் கைகோர்த்தார். தமிழகத்தின் ஆட்சியையும் பிடித்தார். பிராமணச் சடங்கு அற்ற சீர்திருத்தத் திருமணங்களுக்கு உரிமையையும் சட்ட அங்கீகாரத்தையும் வழங்கினார்.

எம்.ஜி.ஆர். - திராவிட மதம் :

அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அண்ணாவின் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற உலக சமுதாய ஆன்மீகக் கொள்கைக்கு, 'திராவிட மதம்' என்று பெயரிட்டு 1981–இல் நடந்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்போது அதைப் பதிவும் செய்தார்.

இப்பொழுது திராவிடர் கழகத்தை உருவாக்கிய தந்தை பெரியாரும், 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற உலக மனித சமுதாய ஆன்மீகக் கொள்கையுடன் திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கிய அறிஞர் அண்ணாவும், அந்தக் கொள்கைக்கு 'திராவிட மதம்' என்று பெயரிட்ட புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரும் நம்மை விட்டுக் கடந்து போய் விட்டார்கள்.

திராவிடர் கழகத்தை உருவாக்கிய தந்தை பெரியார்

அடிப்படையாகக் கொண்ட அந்த நான்கு கொள்கைகளில், கடவுள் மறுப்புக் கொள்கை, பெரியார் காலத்திலேயே அறிஞர் அண்ணா அவர்களால் உலக மனித சமுதாய ஆன்மீகக் கொள்கையான ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டது.

ஆரியப் பிடியிலிருந்து விடுதலை, பிராமணீயச் சூழ்ச்சியிலிருந்து விடுதலை, இந்துமத இழிவிலிருந்தும், இந்துமத மூடநம்பிக்கையிலிருந்தும் விடுதலை ஆகிய மற்ற மூன்று கொள்கைகளும் மேலும் ஆழமாக, தத்துவ ரீதியாக அண்ணா அவர்களாலும் எம்.ஜி.ஆர். அவர்களாலும் பின்பற்றப்பட்டன.

பிராமணப் பெண்மணி :

எம்.ஜி.ஆர். காலத்திற்குப் பின்னர் பிராமணப் பெண்மணி ஒருவர் எம்.ஜி.ஆர். வாரிசாகத் தன்னை அறிவித்துக் கொண்டு திராவிட அரசியல் கட்சிகளில் ஒன்றன் தலைவராக ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தபொழுது அக்கட்சியின் கொள்கை மாறத் தொடங்கியது. திராவிடர்களுக்கு எதிரான 1) ஆரிய ஆதிக்கக் கொள்கை 2) பிராமண சூழ்ச்சிக் கொள்கை 3) சாதி ஏற்றத்தாழ்வை நிலைநிறுத்தும் இந்துத்துவக் கொள்கை ஆகிய திராவிட இனத்திற்கு நேர் எதிரான மூன்று கொள்கைகளையும் உடைய R.S.S. இயக்கத்தின் அரசியல் முகமாக விளங்கும் பாரதீய ஜனதா தமிழகத்தில் காலூன்ற வழிவகுத்தார்.

பாரதீய ஜனதா கட்சி இந்திய ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு உதவியும் செய்தார். தமிழகத்தில் நடந்து கொண்டிருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியை

பாரதீய ஜனதாவின் துணை கொண்டு கலைப்பதற்கு அத்தனை முயற்சிகளையும் எடுத்தார்.

தனிப்பட்ட பகை :

தமிழக முதல்வரான கலைஞருக்கும் பிராமணப் பெண்மணி செல்வி ஜெயலலிதாவிற்கும் தனிப்பட்ட பகையாக வளர்ச்சி பெற்றது.

கொள்கைகள் கைவிடப்பட்டன :

இப்பொழுது அந்தத் தனிப்பட்ட பகையின் காரணமாக, கொள்கைகள் கைவிடப்பட்டு, தமிழக முதல்வராக இருக்கும் கலைஞர் கருணாநிதி அவர்கள் திராவிட அரசியல் கட்சிகளின் அடிப்படை கொள்கைக்கு எதிரான ஆரிய அரசியல் கட்சி அகில இந்திய அளவில் ஆட்சிக்கு வருவதற்கு மிகத் தீவிரமாக உழைக்கக்கூடிய தொண்டர்களில் ஒருவராக மாறிவிட்டார்.

மற்ற திராவிட அரசியல் கட்சிகளும் ஜெயலலிதாவுடன் சேர்ந்தோ அல்லது கலைஞருடன் சேர்ந்தோ ஆரிய அரசியல் கட்சியை ஆதரிக்கும் கட்டாயச் சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

எதிரிகளுக்குத் தொண்டர்களாக மாறியது ஏன்? :

திராவிட அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இதுவரை பேசிவந்த கொள்கைகளுக்கு மாறாகத் தங்கள் கொள்கைகளைக் கைவிட்டுவிட்டு ஆரிய அரசியல் கட்சியாகிய பாரதீய ஜனதாவுக்குத் தொண்டர்களாக மாறியது ஏன்? என்ற கேள்வியே இப்பொழுது நம்முன் நிற்கின்றது.

எதிரிகள் இருவர் - பொட்டல், புல்வெளி :

இன்றைய நிலையில் இந்திய ஆட்சிப் பொறுப்பில் அமருவதற்கு வாய்ப்புள்ள இருபெரும் கட்சிகளில் பாரதீய ஜனதா கட்சி பொட்டலில் இருக்கும் பாம்பு போன்று வெளிப்படையான எதிரி. பாபர் மசூதி இடிக்கப்படக் காரணமான காங்கிரஸ் கட்சி புல்லினுள் மறைந்திருக்கும் பாம்பு போன்று ஒளிந்திருக்கும் எதிரி. திராவிடர்களுக்கு ஆதரவான மண்டல் கமிஷனை எதிர்த்த அத்வானியைப் பயன்படுத்தி காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் காங்கிரசிலுள்ள பிராமணர்கள் பாபர் மசூதியை இடித்தமையை, சிறிது சிந்திக்கத் தெரிந்த எவரும் புரிந்து கொள்ளலாம். இந்த இரண்டில் அஞ்சத்தக்கது புல்லினுள் இருக்கும் பாம்பே ஆகும். அது எந்த நேரத்தில், எவ்வாறு தீமை செய்யும் என்பதைக் கணிக்க இயலாது. சூழ்ச்சியில் மிகச் சிறந்த பிராமணர்கள் தங்கியிருக்கும் இடமே காங்கிரஸ் கட்சி ஆகும்.

காங்கிரஸ் கட்சியின் மாநிலப் பொருளாளராகத் தந்தை பெரியார் இருந்தபொழுது காங்கிரசிலுள்ள பிராமணர்களின் இழி செயல்களும், இழிந்த மறைமுகக் கொள்கைகளுமே பெரியார், சுயமரியாதையைச் சிந்திக்கவும், பின்னர் திராவிடர் கழகத்தை உருவாக்கவும் காரணமாயின என்பது வரலாறு.

ஆகவே, பாரதீய ஜனதா கட்சி, காங்கிரஸ் கட்சி ஆகிய இரண்டு கட்சிகளும் திராவிடர்களுக்கு எதிரான ஆரியர்களுக்கு ஆதரவான ஒரே உடலின் இரண்டு முகங்களே என்பது வரலாறு கற்றுத்தரும் படிப்பினை ஆகும்.

இப்பொழுது சோனியா காந்தி காங்கிரஸ் கட்சிக்குத் தலைமை தாங்குவதால், காங்கிரஸ் நிலையில் மாற்றம்

வரலாம் என எதிர்பார்ப்பது காங்கிரஸ் கட்சியிலுள்ள பிராமணர்களின் திறமையான சூழ்ச்சித் திறனை சரியாகக் கணிக்கத் தெரியாத கணக்கு ஆகும்.

பாரதீய ஜனதா இந்திய மக்களில் 88% இருக்கும் திராவிடர்களின் நேரடி எதிரி; காங்கிரஸ் திராவிடர்களின் மறைமுக எதிரி. இந்த இரு கட்சிகளுக்கும் அடிநாதமாக இருப்பது திராவிடர்களை இழிவுபடுத்தும் இந்துத்துவக் கொள்கையையுடைய இந்துமதம் என்பதே உண்மை ஆகும்.

தந்தை பெரியார் - கடவுள் மறுப்பு :

தந்தை பெரியார் ஆரிய பிராமண ஆதிக்கத்தை ஒழிப்பதற்கு, கடவுள் மறுப்புக் கொள்கையைக் கையில் எடுத்தாரென்றால் திராவிடர்களை இழிவுபடுத்தும் இந்து மதத்தை எதிர்ப்பதற்கு அவர் எடுத்த ஆயுதம் அதுவாகும். அதனால்தான் திராவிட அரசியல் கட்சிகள் எல்லாம் தங்கள் கொள்கைகளைக் கைவிட்ட இந்த நாளிலும் தந்தை பெரியாரின் திராவிடர் கழகத்தைச் சார்ந்த தொண்டர்கள் அவர்கள் எத்தனை துண்டுகளாக உடைக்கப்பட்ட போதிலும் அத்தனை துண்டுகளிலும் சிறிதும் அசையாமல் உறுதியாக நிற்கின்றார்கள்.

அம்பேத்கார் - மதமாற்றம் :

டாக்டர் அம்பேத்கார் 'பிறப்பால் என்னை இழிவுபடுத்தும் இந்துவாகப் பிறந்து விட்டேன். இறக்கும்பொழுது இந்துவாக இறக்கமாட்டேன்' என்று சபதம் எடுத்தார். அதன்படியே இந்துமதத்திலிருந்து பௌத்த மதத்திற்கு மதம் மாறினார்.

டாக்டர் அம்பேத்காரைப் பின்பற்றி இந்து மதத்திலிருந்தும் ஆரியப் பிராமணப் பிடியிலிருந்தும் விடுபட்டு பௌத்தர்களாக மதம் மாறியவர்கள் அவர்களுடைய கொள்கையில் உறுதியாக நிற்கின்றார்கள்.

அம்பேத்காரைப் போன்று தன்மானமுள்ளவர்களாய் இந்து மதத்திலிருந்து மற்ற மதங்களுக்கு மதம் மாறிய திராவிடர்களும் அவரவர் கொள்கைகளில் உறுதியாக இருக்கின்றார்கள்.

உறுதியாளர்கள் :

இந்த இக்கட்டான காலக்கட்டத்தில்

1) கடவுள் மறுப்பாளர்களாகிய திராவிடர்கள்

2) பௌத்த மதத்திற்கு மாறியவர்களாகிய திராவிடர்கள்

3) மற்ற மதங்களுக்கு மாறியவர்களாகிய திராவிடர்கள்

தங்கள் கொள்கையில் உறுதியாக இருக்கின்றார்கள். தந்தை பெரியார், டாக்டர் அம்பேத்கார் காட்டிய மானத்தோடு வாழுகின்றார்கள்.

கொள்கைகளைக் கைவிட்டது ஏன்? :

ஆனால் திராவிட அரசியல் கட்சிகள் தங்கள் கொள்கைகளில் உறுதியாக நிற்க முடியாதது ஏன் ? என்ற கேள்வி எழுகின்றது.

திராவிட அரசியல் கட்சிகள் அக்கட்சிகளுக்குக் கொள்கைகளைக் கொடுத்த பெரியார், அண்ணா, எம்.ஜி.ஆர். ஆகிய மூவர் பெயரையும் தங்கள் அரசியல் ஆதாயத்திற்காகப் பயன்படுத்திக் கொண்டன. அவர்கள் காட்டிச் சென்ற வழிகளில் நடப்பதைத் தவிர்த்தன.

பதவிக்காகக் கொள்கையை இழந்தனர் :

ஆரியப் பிராமணர்களை எதிர்க்க பெரியார் கொடுத்த ஆயுதமாகிய கடவுள் மறுப்புக் கொள்கை திராவிடர் கழகத்தோடு நின்றுவிட்டது.

பிறப்பால் ஏற்றத்தாழ்வுடைய பல குலங்கள் உள்ளன என்ற தவறான நம்பிக்கையையும், தெய்வங்கள் பல இருக்கின்றன என்ற தவறான நம்பிக்கையையும் உருவாக்கிய ஆரியப் பிராமணர்களை எதிர்க்க அண்ணா கொடுத்த ஆயுதமாகிய 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற திராவிடராகிய திருமூலரின் தெளிவான கொள்கை, திராவிட அரசியல் கட்சிகளால் புரிந்து கொள்ளப்படவும் இல்லை, பயன்படுத்தப்படவும் இல்லை.

திராவிடர்களுக்கு எதிரான ஆரியப் பிராமணர்களின் இந்துத்துவக் கொள்கையைத் தாங்கி நிற்கும் இந்து மதத்தை எதிர்ப்பதற்கு ஏற்ற ஆயுதமாக மத ரீதியில் எம்.ஜி.ஆர். பதிவு செய்த மிகச்சிறந்த ஆயுதமாகிய உலகப் பெரும் மதங்களின் மொத்தப் பெயராகிய 'திராவிட மதம்' திராவிட அரசியல் கட்சிகளால் புரிந்து கொள்ளப்படவும் இல்லை, பயன்படுத்தப்படவும் இல்லை.

அவற்றிற்குப் பதில் திராவிட அரசியல் கட்சிகள் அரசியல் பதவிகளைக் கைப்பற்றுவதற்காக, பெரியார், அண்ணா, எம்.ஜி.ஆர். பெயர்களையும், படங்களையும், சிலைகளையும் தாராளமாகப் பயன்படுத்திக் கொண்டன.

விளைவு, திராவிட அரசியல் கட்சிகளுக்குப் பதவிகள் கிடைத்தன. தன்மானக் கொள்கைகளாகிய ஆரியப் பிராமணர்களை எதிர்க்கும் ஆயுதங்கள் கைவிடப்பட்டன.

ஆரிய, திராவிட தன்மானப் போரில் திராவிடர் தோல்வியடைந்தனர். எதிரிகளுக்குத் தொண்டர்களாக மாறினர்.

நேரம் இல்லை :

தன்மானத்தைப் பற்றியோ, ஆரிய, திராவிட தன்மானப் போரைப் பற்றியோ எண்ணிப் பார்க்க திராவிட அரசியல் கட்சிகளுக்கு இப்பொழுது நேரம் இல்லை. தன்மானக் கொள்கையை இழந்து பதவியைப் பிடிப்பதும், அப்பதவி தம்மை விட்டுப் போய் விடாமல் தக்க வைத்துக் கொள்ளுவதும் எவ்வாறு? என்ற சிந்தனையிலேயே அவர்களுடைய நேரம் முழுவதும் செலவு செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது.

மக்கள் உள்ளங்களில் எதிரிகளுக்கு இடம் :

விளைவு, பெரியார், அண்ணா, எம்.ஜி,ஆர். மக்கள் உள்ளங்களிலிருந்து மறையத் தொடங்கி, வாஜ்பாய், அத்வானி, சோனியா போன்ற பிராமண இந்து மதத்திற்கு ஆதரவான திராவிட இன எதிரிகள் மக்கள் உள்ளங்களில் இடம் கொள்ளத் தொடங்கி விட்டனர். இந்தப் பரிதாபமான நிலையை மாற்றுவது எவ்வாறு?

செயல் - சிந்தனை - நம்பிக்கை - மதம் :

ஆரியப் பிராமணர்கள் இந்துமத நம்பிக்கைகளின் வழி திராவிடர்களை அடிமைப்படுத்தி இருக்கின்றார்கள் என்னும் நடைமுறை உண்மையை, தந்தை பெரியார் கண்டார்.

ஒருவருடைய செயலுக்குக் காரணம் அவருடைய சிந்தனை; அவருடைய சிந்தனைக்குக் காரணம்

அவருடைய நம்பிக்கை; அவருடைய நம்பிக்கைக்குக் காரணம் அவருடைய மதம்.

மதத்தின்வழி நம்பிக்கையும், நம்பிக்கையின்வழி சிந்தனையும், சிந்தனையின்வழி செயல்களும் அமைகின்றன.

இங்கிலாந்துக்குப் படிக்கச் சென்றிருந்த மகாத்மா காந்தி அங்கு ஒருநாள் ஆட்டிறைச்சியை உண்ண நேரிட்டது. உண்ட பின்னர், அவருடைய உள்ளத்திலிருந்த நம்பிக்கை அவரை வறுத்தத் தொடங்கியது. இரவெல்லாம் வயிற்றிலிருந்து ஆடு கத்துவதைப் போன்று உணர்ந்தார். தம் செயலுக்காக மிகுந்த வேதனைப்பட்டார். இது அவருடைய சுயசரிதையில் அவர் எழுதியிருக்கும் செய்தி. ஆட்டிறைச்சியை உணவாகக் கொள்ளுதல் இந்திய மக்களில் மிகப் பெரும்பாலோரின் அன்றாட வழக்கம். மிகப் பெரும் பகுதியினராகிய இந்தியர்கள் ஆட்டிறைச்சியை உண்ணும்பொழுது மகாத்மா காந்தியைப் போல் எண்ணுவதுமில்லை. வருந்துவதும் இல்லை. ஆனால் காந்தியடிகள் மட்டும் ஆட்டிறைச்சி உண்டபோது மனச்சாட்சியில் மிகுந்த துன்பத்தை அடைந்தார்; அதற்குக் காரணம் என்ன? மகாத்மா காந்தியின் குடும்பத்தினர் இறைச்சியை உண்பதில்லை. அவர்கள் ஏன் உண்பதில்லை? உண்ணக்கூடாது என்பதும், உண்டால் அடுத்த பிறவியில் ஆடாகப் பிறக்க நேரிடும் என்பதும் அவர்களுடைய நம்பிக்கை. ஏன் அவர்களுக்கு மட்டும் அந்த நம்பிக்கை இருந்தது?

அவர்கள் சமண மதத்தைச் சேர்ந்தவர்கள். சமண மதத்தின் நம்பிக்கை, பிற உயிரைக் கொன்று அதன்

இறைச்சியை உண்டால் அடுத்த பிறவியில் அந்த மிருகமாகப் பிறந்து துன்பத்தை அனுபவிக்க நேரிடும் என்பதாகும். சமண மத நம்பிக்கைகள் உண்மையானவை என்று காந்தியடிகள் நம்பியதால், அந்த நம்பிக்கையை மீறி உண்டதால் அவருடைய மனச்சாட்சி அவரைத் துன்பப்படுத்தியது.

ஆகவே, ஒருவருடைய செயல்கள் அவருடைய சிந்தனை வழியிலும், சிந்தனை நம்பிக்கை வழியிலும், நம்பிக்கை மதத்தின் வழியிலும் வருகின்றன என்பது நடைமுறை உண்மையாகும்.

அரசியல் அடிமைத்தனம் அன்று :

திராவிடர்கள் ஆரியர்களுக்கு இப்பொழுதும் அடிமைப்பட்டிருக்கின்றார்கள் என்றால் இது அரசியல் அடிமைத்தனம் அன்று. அரசியல் அடிமைத்தனம் என்றால், அரசியல் மாற்றத்தை உருவாக்கி, திராவிடர்களுக்கு விடுதலையைக் கொடுத்துவிடலாம்.

மத அடிமைத்தனமேயாகும் :

ஆனால் திராவிடர்களின் அடிமைத்தனம் அரசியலில் இல்லை; மதத்தில் இருக்கிறது. திராவிடர்கள் பிறப்பால் ஆரியர்களுக்கு அடிமைகள் என்னும் நம்பிக்கை திராவிடர்கள் பின்பற்றும் இந்து மதத்தில் இருக்கிறது.

இந்துமத நம்பிக்கையின்படி மனிதர்கள் எல்லோரும் பிறப்பால் சமமானவர்கள் அல்லர். அவரவருடைய முற்பிறவியின் செயல்களுக்கு ஏற்ப அவரவருடைய பிறப்பு அமைகிறது; முற்பிறவியில் மிக அதிகமான நன்மை செய்தவர்கள் பிறப்பால் மிக உயர்ந்த பிராமணராகப்

பிறக்கின்றார்கள்; முற்பிறப்பில் மிக அதிகமான தீமையைச் செய்தவர்கள் பிறப்பால் மிக இழிந்த தீண்டத்தகாதவர்களாகப் பிறக்கின்றார்கள்.

மிக உயர்ந்த பிராமண சாதிக்கும் மிக இழிந்த தீண்டத்தகாதார்க்கும் இடையில் அவரவருடைய முற்பிறவி வினைக்கு ஏற்ப உயர்ந்த சாதிகளிலோ, தாழ்ந்த சாதிகளிலோ பிறக்கின்றார்கள்; இவ்வாறு சாதி ஏற்றத்தாழ்வுகளை, கடவுளே ஏற்படுத்தி இருக்கின்றார்; அவரவருடைய முற்பிறவி வினைக்குத் தகுந்த சாதியில் பிறக்குமாறு கடவுளே ஏற்பாடு செய்துள்ளார்; ஆகவே, மிக உயர்ந்த சாதியாகிய பிராமண சாதியில் பிறந்திருக்கின்றவர்களைப் பார்த்துப் பொறாமைப்படுவதும், பிராமணர்களைத் தங்களைப் போன்ற சமமான மனிதர்களாக நினைப்பதும், பிராமணர்களை எதிர்த்துப் பேசுவதும், செயல்படுவதும் கடவுளுக்கு எதிரான செயலாகும்; இதனால் அடுத்த பிறவியில் இன்னமும் கீழான சாதியிலேயே பிறக்க வேண்டியது வரும் என்று நம்புவதே இந்து மத நம்பிக்கையாகும்.

இந்து மதத்திலுள்ள இந்த நம்பிக்கைக்கு அடிப்படையான தத்துவம் ஆதி சங்கரரால் உருவாக்கப்பட்ட அத்வைதக் கொள்கையாகும். அவர் பௌத்த சமண மதங்களிலுள்ள பிறவிச் சுழற்சிக் கொள்கையை திரித்து தாம் உருவாக்கிய இன்றைய இந்துத்துவத்தோடு கலந்தார். அதுவே அத்வைதக் கொள்கை ஆகும்.

இந்த நம்பிக்கையின்படி, ஆரிய அரசர்கள் ஆட்சி நடத்துவதற்கு உறுதுணையாயிருக்கும் ஆரிய அரசியல் சட்டநூல் மனுதர்ம சாஸ்திரமாகும்.

உள்ளத்தின் ஆழத்தில் :

ஆகவே, பிறப்பால் உயர்ந்தவர்கள் ஆரியர்கள் என்பதும், பிறப்பால் தாழ்ந்தவர்கள் திராவிடர்கள் என்பதும் இந்து மத நம்பிக்கையாகும். தம்முடைய மதம் இந்து மதம் என்று உரிமை பாராட்டும் திராவிடர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் முற்பிறவியில் செய்துள்ள தீவினைக்கு ஏற்ப இப்பிறவியில் கீழ்சாதியாக, திராவிட இனத்தில் சூத்திரராகவோ, பஞ்சமராகவோ பிறந்துள்ளதை நம்பி ஏற்றுக் கொண்டிருப்பவர்கள் ஆவர்.

இந்த நிலையை, திராவிடராகப் பிறந்திருக்கின்ற ஒருவருடைய அறிவு ஏற்றுக் கொள்ள மறுத்தபோதிலும், அவருடைய மத நம்பிக்கையிலிருந்து அவரால் விடுபட இயலாது. அந்த நம்பிக்கை 'முற்பிறவி வினை' என்ற பெயராலும், 'கடவுள்' என்ற பெயராலும் அவருடைய அறிவைத் தாண்டி அவருடைய உள்ளத்தின் ஆழத்திலுள்ள மத நம்பிக்கையில் இடம் பெற்றுள்ளது. மத நம்பிக்கை, சிந்தனையையும் செயலையும் உருவாக்குகிறது. அவர்கள் அடிமைகளாக வாழுகின்றார்கள்.

தந்தை பெரியார் முயற்சி -கடவுள் மறுப்புக் கொள்கை :

இந்துமதமும், இந்துமத நம்பிக்கைகளுமே திராவிடர்களை அடிமைப்படுத்தியிருக்கின்ற காரணத்தால், இந்து மதத்தையும், இந்து மத நம்பிக்கைகளையும், இந்து மதக் கடவுளர்களையும் எதிர்த்து கடவுள் மறுப்புக் கோட்பாட்டின் அடிப்படையில் திராவிடர்களை விடுவிக்க தந்தை பெரியார் முயன்றார்.

அவருடைய கொள்கை திராவிடர் கழகத்தோடு நின்றுவிட்டது. திராவிட அரசியல் கட்சிகள் அவருடைய கொள்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் இன்று அவை ஆரியப் பிராமணர்களுக்குத் தொண்டர்களாக மாறி தங்கள் கொள்கைகளைக் கைவிட்டு விட்டன.

மாற்று என்ன?

இந்து மதத்திற்கு மாற்றாக இன்னொருமதம் வேண்டும் என்றால், இந்துமதத்தை விட்டுவிட்டு வேறுமதங்களுக்கு மாற வேண்டுமா? என்ற கேள்வி எழுகிறது.

இந்துமதத்தில் அடிமைப்பட்டிருக்கும் திராவிடர்களை விடுவிக்க, தந்தை பெரியார் மத எதிர்ப்புக் கொள்கையையும், கடவுள் எதிர்ப்புக் கொள்கையையும் ஆயுதங்களாகப் பயன்படுத்தினார். டாக்டர் அம்பேத்கார் மதம் மாறுவதை ஆயுதமாகப் பயன்படுத்தினார். இரண்டு ஆயுதங்களும் இந்திய மக்கள் தொகையில் மிகமிகச் சிறிய ஒரு பகுதியினராலேயே கைக்கொள்ளப்பட்டன. இந்துமதத்தில் உள்ள மிகப்பெரும் பகுதியினரால் அந்த இரண்டு முறைகளையும் ஏற்றுக் கொள்ள இயலவில்லை. காரணம் கடவுள் மறுப்புக் கொள்கை ஒரு சிலருக்கே உடன்பாடானதாகும். அவ்வாறே மதம் மாறுதலும் ஒரு சிலருக்கே உடன்பாடானதாகும். மற்றப் பெரும் பகுதியினரால் இந்த இரண்டு நிலைகளையும் ஏற்றுக் கொள்ள இயலவில்லை. அவர்கள் பழையபடியே இந்துமதத்தில் பிராமணர்களுக்கு அடிமையாய் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள்.

வேறு ஏதாவது வழி இருக்கின்றதா? :

இந்துமதத்தில் அடிமையாய் வாழ்ந்து கொண்டு இருக்கும் திராவிட இன சூத்திரர்களையும், பஞ்சமர்களையும் விடுவிப்பது எவ்வாறு? தந்தை பெரியார், டாக்டர் அம்பேத்கார் ஆகிய இருவரும் காட்டிய வழிகளை விட வேறு ஏதாவது வழி இருக்கின்றதா? என்ற கேள்வியே இப்பொழுது நம்முன் எழுந்து நிற்கின்றது. இதுவரை நாம் பார்த்துள்ளவற்றில்

1) ஆரியர்கள் என்பது ஓர் இனத்தைக் குறிக்காது என்பதையும்

2) சமஸ்கிருதம் ஆரியர்களுக்குரிய மொழி இல்லை என்பதையும்

3) மதம் இல்லாமல் வெளிநாட்டிலிருந்து நம் நாட்டின் மீது படையெடுத்து வந்த (1) பாரசீகர், (2) கிரேக்கர், (3) சகர், (4) குஷானர், (5) ஹூணர் இவர்களையும், வணிகத்திற்காக வந்த 6) ரோமர்களையும் குறித்த பொதுப்பெயரே ஆரியர் என்பதையும், நிறத்தின் அடிப்படையில் இவர்களுக்கும் இந்திய திராவிட மக்களுக்கும் பிரிவு வகுக்கப்பட்டு, வருணம் (நிறம்) ஆசிரம தர்மம் என்ற கொள்கை உருவாக்கப்பட்டது

என்பதையும் நாம் இதுவரை பார்த்து உள்ளோம். இதுவரை நாம் பார்த்துள்ள மேலே கண்ட குறிப்புகளிலிருந்து மதம் இல்லாமல் வெளிநாட்டிலிருந்து வந்த ஆரியர்களுக்கு 'இந்துமதம்' எவ்வாறு சொந்தமாயிற்று? என்ற கேள்வியைக் கேட்போமானால் இந்துமதம் அவர்களுக்குச் சொந்தமான வரலாறு நமக்குக் கிடைக்கும்.

இந்துமதத்தை உருவாக்கியவர்கள் யார்? :

'இந்துமதம்' என்ற பெயர் ஐரோப்பியர் இந்தியாவிற்கு வருவதற்கு முற்பட்ட இந்திய இலக்கியங்கள் எவற்றிலுமே இல்லை. ஐரோப்பியர்கள் வருவதற்கு முன்னர் கடவுள் கொள்கையையுடைய சைவம், வைணவம், கௌமாரம், காணாபத்யம், சாக்தம், சௌரம் ஆகிய அறுவகைச் சமயங்களின் பெயர்களும் கடவுள் கொள்கை இல்லாத பௌத்தம், சமண சமயங்களின் பெயர்களும் ஐரோப்பியர் வருகைக்கு முற்பட்ட இந்திய இலக்கியங்களில் நாம் காணலாம். 'இந்துமதம்' என்ற பெயரைக் காண இயலாது. இந்துமதம் என்ற பெயர் ஐரோப்பியர் வருகைக்கு முற்பட்ட இந்திய இலக்கியங்கள் எவற்றிலுமே இடம் பெறவில்லை. ஆகவே, இந்துமதத்தை உருவாக்கியவர்கள் யார்? என்ற கேள்வி கேட்கப்படுமானால் 'இந்து மதம்' என்ற பெயரை உருவாக்கியவர்கள் ஐரோப்பியர்கள் என்பதே வரலாறு நமக்குத் தரும் பதிலாகும்.

ஏன் உருவாக்கினார்கள்? :

ஐரோப்பியர்கள் ஏன் 'இந்துமதம்' என்ற பெயரை உருவாக்கினார்கள்? என்ற கேள்வி இப்பொழுது எழுகின்றது.

இந்தியாவிற்கு வந்த ஐரோப்பியர்களில் ஆங்கிலேயர்கள் இந்திய நாட்டைப் பிடித்து ஆளத் தொடங்கியபோது இந்திய மக்களுக்கு நீதி வழங்க வேண்டியது அவர்களுடைய கடமை ஆயிற்று. அந்தக் கடமையின்படி கல்கத்தாவில் உச்சநீதி மன்ற நீதிபதிகளாக நியமிக்கப்பட்டவர்களால் இந்திய மக்களுக்கு நீதிவழங்குவதில் சில நடைமுறைச் சிக்கல்கள் எழுந்தன. இந்தியாவில் உள்ள இஸ்லாமிய மக்களுக்கு இஸ்லாமியச்

சட்டத்தின்படி(Islamic Law)யும் இந்தியக் கிறிஸ்தவ மக்களுக்கு கிறிஸ்தவச் சட்டத்தின்படி(Christian Law) யும் நீதி வழங்குவது எளிதாயிற்று. ஆனால், இந்திய மக்களில் முஸ்லீம்களும், கிறிஸ்தவர்களும் அல்லாத மக்களுக்கு நீதி வழங்குவதற்கு அவர்களுக்கு ஒரு அடிப்படைச் சட்டம் தேவைப்பட்டது.

ஒரு குலத்திற்கு ஒரு நீதி - உலகில் பரவியது :

அப்பொழுது கல்கத்தாவில் இருந்த பிராமணர்கள் வட இந்தியாவில் இடைக்காலத்தில் மதமற்ற அந்நியர்களாகிய ஆரியர்களால் பிடித்து ஆளப்பட்ட ஆரியவர்த்தனம் என்ற பெயரை உடைய ஆரியர்களுக்குட்பட்ட ஆட்சியில் இருந்த பகுதியில் ஆரியர்களுக்கு ஒரு நீதியும் திராவிடர்களுக்கு ஒரு நீதியும் வழங்கப் பயன்பட்ட ஆரிய அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டிருந்தது. அதற்கு 'மனுதர்ம சாஸ்திரம்' என்று பெயர். ஒரு குலத்திற்கு ஒரு நீதி வழங்கும் ஆரிய அரசியல் சட்டப்புத்தகமாகிய மனுதர்ம சாஸ்திரத்தை கல்கத்தாவில் இருந்த பிராமணர்கள் அப்பொழுது கல்கத்தா நகரத்தில் உச்சநீதி மன்றத்தில் நீதிபதியாய் இருந்த சர்.வில்லியம் ஜோன்ஸ் (Sir. William Jones) என்ற ஆங்கிலேயரிடம் கொடுத்தார்கள். சமஸ்கிருதத்தில் இருந்த அந்த நூலை அவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அந்த நூல் பின்பு ஐரோப்பிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு ஐரோப்பா முழுவதும் பரவியது.

வெளிநாட்டிலிருந்து வந்த ஐரோப்பியர்களும் ஆரிய இனத்தைச் சார்ந்தவர்களே என்று அவர்களுக்குக் கூறி இந்தியாவில் பரவிய ஐரோப்பியர்களின் அரசியலில் பிராமணர்கள் பங்கு பெற்றார்கள்.

மனுதர்ம சாஸ்திரம் இந்து சட்டம் எனவும், அந்தச் சட்டம் குறிப்பிடும் கொள்கை Hinduism, இந்துத்துவம் எனவும், இந்துமதம் எனவும் பெயர் பெறலாயின. அந்தப் பெயரே இன்று இந்தியாவில் இந்துமதம் என்று குறிக்கப்படுகிறது.

அநீதியை நியாயப்படுத்தல் :

ஆரிய அரசியல் சட்டநூலாகிய மனுநூல் கொள்கையை நியாயப்படுத்தி, அதற்குத் தத்துவ விளக்கமாக, திராவிடராகிய வேதவியாசரின் நூல்களுக்கு உரை எழுதும்போது, தவறான உரையின் வழி அத்வைதக் கொள்கையை ஆதிசங்கரர் உருவாக்கினார்.

ஆகவே, ஆரிய அரசியல் சட்டம், அதை நியாயப்படுத்தும் அத்வைதக் கொள்கை ஆகிய இரண்டும் இன்று 'இந்துமதம்' என்ற பெயரால் குறிக்கப்படுகின்றன.

இந்திய ஐரோப்பியர் :

வெளிநாட்டிலிருந்து வந்த ஐரோப்பியர்களும், அதற்கு முன்னர் வெளிநாட்டிலிருந்து வந்த ஆரியர்களும் நிறத்தினால் ஒன்றாக இணைந்து இந்திய மக்களாகிய திராவிட மக்களை ஆளத் தொடங்கினர். வெளிநாட்டிலிருந்து வந்த ஐரோப்பியர்கள் தங்களோடு இணைந்தவர்கள் என்ற நோக்கில் ஆரியர்கள், இந்திய ஐரோப்பியர்கள் (Indo Europeans) என்ற பெயரைத் தங்களுக்குச் சூட்டிக் கொண்டார்கள். ஐரோப்பியர்களும் இந்திய மக்களைக் காட்டிக் கொடுக்கத் தங்களுக்கு ஆள் கிடைத்தார்கள் என்று அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார்கள்.

திராவிடர்களின் சிறப்பு அறியப்படாத நிலை :

திராவிடர்களுடைய நாகரிகம் பற்றியோ, திராவிடர்களுடைய ஆன்மீகச் சிறப்புப் பற்றியோ, திராவிடர்களுடைய இலக்கியச் சிறப்புப் பற்றியோ பதினெட்டு, பத்தொன்பது நூற்றாண்டுகளில் இந்தியாவில் வாழ்ந்த ஐரோப்பியர்களுக்குத் தெரியாது.

திராவிட மொழிகளின் ஒப்பாய்வு எழுதிய கால்டுவெல்லுக்குச் சங்க இலக்கியங்கள் கிடைக்கவில்லை.

திராவிடர்களின் சிந்துவெளி நாகரிகப் புதைப்பொருள் ஆய்வுகள் 18,19 ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த ஐரோப்பியர்களுக்குத் தெரியாது. ஏனென்றால் இருபதாம் நூற்றாண்டுகளின் நடுப்பகுதியில் இருந்தே திராவிடர்களின் பழம்பெரும் நாகரிகமான சிந்துவெளி நாகரிகத்தை உலகம் அறிந்தது.

ஆகவே, திராவிடர்களுடைய ஆன்மீகக் கருத்தோ, திராவிடர்களுடைய நாகரிகமோ, திராவிடர்களுடைய மதங்களோ ஐரோப்பியர்களால் அறியப்படாத நிலையில் 'Hinduism' - இந்துத்துவம், இந்துமதம் என்ற பெயர்களால் திராவிடர்களுக்கு எதிரான ஆரியர்களுடைய அரசியல் கொள்கை ஐரோப்பியர்களால் உலகம் முழுவதும் பரப்பப்பட்டது.

மதம் அன்று :

இப்பொழுது இந்தியாவின் உச்சநீதிமன்றம் இந்துத்துவம் (Hinduism) என்பது ஒரு வாழ்க்கை முறையே தவிர மதம் அன்று என்று தீர்ப்பளித்துள்ளது. இந்துத்துவக் கொள்கையில் கடவுள் நம்பிக்கை இல்லை என்று இந்தியப்

பிரதமர் வாஜ்பேயி கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஆகவே, ஐரோப்பியர்களால் உருவாக்கப்பட்ட இந்து மதம் என்ற பெயரில் திராவிடர்களை அடிமைப்படுத்திய ஆரியர்களின் அரசியல் சட்டக் கொள்கைகள் மட்டுமே இடம் பெற்றுள்ளன.

இஸ்லாமிய மதம், கிறிஸ்தவ மதம் என்பதைப் போன்று வரையறைக்குட்பட்ட ஆன்மீகக் கொள்கைகளோ, ஆன்மீக நூல்களோ, மதங்களை உருவாக்கிய மகாவீரர், புத்தர், இயேசு கிறிஸ்து, முகம்மது நபி இவர்களைப் போன்று மதத்தை நிறுவிய நிறுவனர்களோ இந்துமதத்திற்குக் கிடையாது. ஏனென்றால் அது ஒரு மதம் அன்று. அது ஆரியர்களின் வாழ்க்கை முறையைச் சொல்லும் ஆரிய அரசியல் சட்டத் தொகுப்பு ஆகும்.

கேள்விகள் எழுகின்றன :

அப்படியானால், இந்துமதக் கடவுள் என்று சிவன், விஷ்ணு, பிரமா என்ற மும்மூர்த்திகளும், சிவன், சக்தி, விஷ்ணு, குமரன், பிள்ளையார், பிரமன், ஐயப்பன் ஆகிய சிவக்குடும்பத் தெய்வங்களும் இந்துமதக் கடவுளர்களாகச் சொல்லப்படுகின்றனரே, அது எவ்வாறு?

இராமாயணம், மகாபாரதம், பகவத்கீதை, நாலாயிர திவ்வியப் பிரபந்தம், தேவாரம், திருவாசகம் முதலிய சமய இலக்கியங்கள் இந்துமதத்தைச் சார்ந்தன என்று சொல்லப்படுகின்றனவே, அது எவ்வாறு? அத்வைதம், விசிஷ்டாத்வைதம், துவைதம், சைவசித்தாந்தம் ஆகிய நான்கு தத்துவங்களும் இந்துமதத் தத்துவங்கள் என்று சொல்லப்படுகின்றனவே, அது எவ்வாறு? இந்தியா

முழுவதும் இந்துமதக் கோயில்கள் ஏராளமாக இருக்கின்றனவே, அது எவ்வாறு? என்னும் கேள்விகள் எழுகின்றன.

அறுவகைச் சமயங்களே :

மேலே குறிக்கப்பட்டுள்ளவை அனைத்தும் கி.பி.முதல் நூற்றாண்டிற்குப் பின்னர் தமிழகத்தில் உருவாகி, பக்தி இயக்கமாக வளர்ந்து, இந்தியா முழுவதும் பரவிய கடவுள் கொள்கையையுடைய சைவ, வைணவ சமயங்களின் கடவுள்களும், இலக்கியங்களும், தத்துவங்களும், கோயில்களும் ஆகும்.

சைவ, வைணவ சமயங்களின் இன்னொரு பெயர் அறுவகைச் சமயம் என்பதாகும்.

சைவ, வைணவ சமயங்களின் பிரிவுகளாகிய அறுவகைச் சமயத்தை ஆதிசங்கரர் அத்ஜைவதக் கொள்கையின்கீழ் ஆரியர்களுக்கு அடிமைப்படுத்தினார் என்பது வரலாறு.

ஆகவே, ஆதிசங்கரராகிய ஆரியரால் அடிமைப்படுத்தப்பட்ட அறுவகைச் சமயங்கள் தமிழர்களாகிய திராவிடர்களுக்குரிய திராவிட மதத்தின் கிளைகள் ஆகும்.

தமிழகத்திலிருந்தே :

மேலே கூறப்பட்டுள்ள இந்துமதக் கடவுளர்க்குரிய இந்தியா முழுவதும் உள்ள கோயில்களில் எண்பது சதவிகிதத்திற்கும் மேற்பட்ட கோயில்கள் தமிழகத்தில் மட்டுமே இருக்கின்றன. அதைப் போன்று இன்று இந்தியா

முழுவதும் உள்ள மக்கள் பேசும் மொழிகளில் மேலே குறிப்பிட்ட அறுவகைச் சமயங்களைச் சார்ந்த பழமையான நூல்கள் தமிழ்மொழியில் மட்டுமே இருக்கின்றன.

அதைப் போன்று, அத்வைதம், விசிஷ்டாத்வைதம், சைவசித்தாந்தம் ஆகிய மூன்றும் அன்றைய தமிழகத்திலும், துவைதம், தமிழகத்தை ஒட்டியுள்ள கர்நாடகத்திலும் தோன்றி பின்னர் வட இந்தியாவிற்குப் பரவியுள்ளன என்பது வரலாறு.

ஆகவே, இந்துமதம் என்ற பெயர் ஐரோப்பியர்களால் உருவாக்கப்பட்டது. அது ஒரு வாழ்க்கைமுறையே தவிர அது ஒரு மதம் அன்று. அதில் கடவுள் நம்பிக்கைக்கு இடமில்லை. தமிழகத்தில் தோன்றிய அறுவகைச் சமயக் கோயில்களும், இலக்கியங்களும், தத்துவங்களும், கடவுளர்களும் தமிழர்கள் அல்லது திராவிடர் களுக்குரியனவே அன்றி ஆரியர்களுக்குரியவை அல்ல.

ஆகவே, திராவிடர்களுக்குரிய திராவிட மதக் கடவுளர்களின் திராவிட மத நூல்களை, திராவிட மதத் தத்துவங்களை, திராவிட மதக் கோயில்களை ஆரியர்களுக்குரிய இந்துமதத்தோடு சேர்த்து எண்ணுவது திராவிட மத வரலாற்றையும், திராவிட இன வரலாற்றையும் அறியாமையால் ஏற்பட்ட தவறேயாகும். இந்த அறியாமையினாலேயே இன்று திராவிட மதமும், திராவிட இனமும் ஆரியர்களின் இந்துத்துவக் கொள்கைக்கு அடிமையாக்கப்பட்டிருக்கின்றன.

போலி மதம் - சொந்தமதம் :

ஆகவே, ஐரோப்பியர்களால் உருவாக்கப்பட்ட இந்துமதம் என்பது ஒரு போலிமதம் ஆகும். இந்தியா

முழுவதும் உள்ள திராவிடர்களின் திராவிட மதமே திராவிட இந்தியாவின் சொந்த மதமாகும்.

மறைக்கப்பட்ட வரலாற்று உண்மைகள்

ஆகவே,

1) 'பிராமணர்கள்' – என்பது ஒரு சாதிப்பெயர் அன்று.

2) 'ஆரியர்கள்'– என்பது ஒரு இனப்பெயர் அன்று.

2) 'சமஸ்கிருதம்'– என்பது ஆரியர்களின் மொழி அன்று.

4) 'இந்து மதம்'– என்பது ஐரோப்பியர்களால் உருவாக்கப்பட்டது

என்பன மறைக்கப்பட்ட வரலாற்று உண்மைகளாகும்.

திராவிடர்களின் கடவுளே உலகக் கடவுள் :

1) இந்தியா முழுவதும் வாழ்ந்த தெய்வீக இனமான திராவிட இனத்திலிருந்து, உலக மதங்கள் எல்லாம் உருவாகியுள்ளன என்பதும் உலக மதங்கள் எல்லாவற்றாலும் போற்றப்படும், அந்த 2) ஒரே கடவுள் திராவிடர்களால் சிவன் என்று போற்றப்படுகிறார் என்பதும், 3) அந்த ஒரே கடவுளுடைய மற்ற அம்சங்களே அவருடைய குடும்ப உறுப்பினர்கள் என்பதும், 4) அந்த ஒரே கடவுள் உருவமற்றவர் என்பதும் 'வினைதீர்க்கும் விநாயகரே போற்றி' என்ற தலைப்பில் வெளிவந்த துண்டு வெளியீட்டின் கீழ்க்காணும் பகுதியால் விளக்கப்படுகின்றன.

"*விநாயகர் குடும்பத்தில் மொத்தம் ஏழு பெயர்கள்*

சொல்லப்படுகின்றன. பிள்ளையாருடைய தம்பி குமரக் கடவுள். குமரக் கடவுள் வள்ளியைத் திருமணம் செய்வதற்குப் பிள்ளையார் உதவி செய்தார். இவர்கள் இருவரும் சக்தியின் பிள்ளைகள். சக்தி இருக்கும் இடம் சிவபெருமான் உடலின் இடது பக்கமாகும். சிவபெருமானின் அதே இடது பக்கத்தில் இருப்பவர்தான் விஷ்ணு.

ஆகவே, சிவபெருமானின் இடது பக்கத்தைப் பெண்ணாகச் சொன்னால் சக்தி; ஆணாகச் சொன்னால் விஷ்ணு. விஷ்ணுவுக்கு இரண்டு பிள்ளைகள். பிரமன், ஐயப்பன். ஆகவே, சிவபெருமானுக்குச் சக்தியின் வழியாக இரண்டு பிள்ளைகள். விஷ்ணு வழியாக இரண்டு பிள்ளைகள். ஆக மொத்தம் வினைதீர்க்கும் விநாயகர் குடும்பத்தில் ஏழுபேர். சிவபெருமானின் நான்கு பிள்ளைகளும் நான்கு விதத்தில் சிறந்தவர்கள்.

1. குமரக்கடவுள் – சூரனை வென்றவர் அதாவது தீமையை வென்றவர்.

2. விநாயகர் – இறந்து உயிர் பெற்றவர்.

3. பிரமன் – உலகைப் படைத்தவர்.

4. ஐயப்பன் – 18 படிகள் ஏறிப் பார்க்க வேண்டிய ஒளியாயிருக்கின்றார். அதாவது ஒளி மயமானவர்.

ஒரே கடவுளின் ஆறு அம்சங்கள்

'அப்பன்–அம்மை–மகன்' என்னும் சோமாஸ்கந்தர்

தத்துவத்திலும் 'சிவன்–விஷ்ணு–பிரமன்' என்னும் மும்மூர்த்தி தத்துவத்திலும் நமக்குக் கிடைக்கும் அடிப்படைக் கருத்து சிவன், சக்தி, குமரன், விநாயகர், விஷ்ணு, பிரமன், ஐயப்பன் என்னும் ஏழு பெயர்கள் குறிக்கப்பட்டாலும் ஏழு தனித்தனிக் கடவுள் என்பது தவறாகும். ஒரே கடவுளின் மற்ற ஆறு அம்சங்கள் என்பதே பொருத்தமாகும். அந்த ஒரே கடவுளின் பெயர் சிவன் என்பதாகும்.

சிவனுடைய உடலின் இடப்பக்கப் பெயர் விஷ்ணு என்பதும், விஷ்ணுவின் உந்திக்கமலத்தில் பிரமன் இருக்கின்றார் என்பதும் விளக்குவது என்னவெனில் மும்மூர்த்தி என்பது தனித்தனியாகப் பிரிக்கப்படக் கூடிய மூன்று கடவுள் இல்லை; ஒரு கடவுளே மூன்று நிலைகளில் செயல்படுகின்றார் என்பதை விளக்கும் தத்துவக் கருத்து ஆகும். ஆகவே, சிவன் ஒருவரே கடவுள் ஆவார். அவருக்கு ஆறு அம்சங்கள்.

சிவலிங்கம் – கடவுளுக்கு உருவம் கிடையாது

அவருக்கு உருவம் கிடையாது என்பதை விளக்குவது தான் சிவன் கோயில்களின் கருவறையில் இருக்கும் சிவலிங்கம் நமக்கு விளக்கும் தத்துவமாகும். சிவலிங்கத்திற்கு மனிதர்களைப் போன்றோ, விலங்குகள் போன்றோ, பறவைகள் போன்றோ கண், மூக்கு, வாய் உடைய உருவம் கிடையாது. அது திருவருள் அடையாளக்குறி. சிவபெருமானின் இந்தத் திருவருள் அடையாளக் குறியே உலகம் முழுவதும் போற்றப்படுகிறது; வணங்கப்படுகிறது. (இதன் சிறப்பை அறிய இயலாதவர்கள் இக்குறிக்கு இழிவான

பொருள் கூறி அவமதிக்கின்றார்கள். அவர்கள் சிவனை–கடவுளை அறிந்து கொள்ள இயலாத அந்நியர்கள் என்பது வரலாறு).

திராவிட வழிபாடு – திராவிட சமயம்

சிந்துவெளி நாகரிக காலத்தில் திராவிடர்களால் வணங்கப்பட்ட சிவலிங்க வழிபாட்டிலிருந்து பின்னர் உருவானதே பைபிள் ஆகும். பெத்தேல், சீகேம், சீனாய், கில்கால், மிஸ்பா, எபனேசர் ஆகிய ஆறு இடங்களில் சிவலிங்க வழிபாடு நடைபெற்று வந்ததை நாம் பைபிளில் பார்க்கின்றோம். சிவன், பைபிளில் 'எகோவா' என்று எபிரேய மொழியில் குறிக்கப்படுகின்றார். அதன் பின்னர் எழுந்த குரானில் சிவன் அரபு மொழியில் 'அல்லா' என்று குறிக்கப்படுகின்றார். உலகம் முழுவதிலுமுள்ள இஸ்லாமியர்களின் ஒரே ஒரு கோவில் இருக்கும் இடமான மக்கா நகரிலுள்ள சிவலிங்கத்தை (காபா–புனிதக்கல்) வழிபடுவதற்கே இஸ்லாமியர்கள் ஹஜ் யாத்திரை செல்லுகின்றார்கள்.

கடவுள் ஒருவரே

ஆகவே சிவன், எகோவா, அல்லா என்று மூன்று பெயராக மூன்று மொழிகளில் சொல்லப்படும் கடவுள் ஒருவரே. அவருக்கு உருவம் இல்லை".

திராவிட ஆன்மீகம் :

திராவிட மதங்களின் வழி வெளிப்படும் திராவிட ஆன்மீகக் கொள்கையைப் புரிந்து கொள்ள திராவிட சமய இறை வேண்டல் இங்கே கொடுக்கப்படுகின்றது.

திராவிட சமய இறைவேண்டல்

தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

அன்பின் உருவாக விளங்கும் எங்கள் இறைவா,
செந்தமிழில் உன் பெயர் சிவன் என்பது!
எபிரேய மொழியில் நீ எகோவா ஆனாய்!
அரபு மொழியில் உன்னை அல்லா என்பர்!

உன் அருள் சக்தியை,
அம்மை என்பர் சைவர்!
விஷ்ணு என்பர் வைணவர்!
பரிசுத்த ஆவி என்பர் கிறிஸ்தவர்!
ரூகுல்லா என்பர் இஸ்லாமியர்!

உன் அருள் நிறை மொழியின் உருவை,
வார்த்தை என்பர் யூதர்!
கலிமத்துல்லா என்பர் இஸ்லாமியர்!
இயேசு என்பர் கிறிஸ்தவர்!
குமரக்கடவுள், பிள்ளையார் என்பர் சைவர்!
பிரமன், ஐயப்பன் என்பர் வைணவர்!

பல மதங்களில், பல மொழிகளால், பல பெயர்களில், பல ஒலிகளால், பல கோணங்களில் நீ போற்றி வணங்கப்பட்டாலும் நீ பலர் அல்லன், நீ ஒருவனே! உன்னால் படைக்கப்பட்ட மனிதர்களாகிய நாங்கள் ஒரே குலத்தைச் சேர்ந்தவர்களே!

ஒன்றே குலம்; ஒருவனே தேவன்!

என்னும் இந்த ஆன்மீக உண்மையைத் திராவிட சமய வரலாற்று வழியில் நாங்கள் நன்கு உணர்ந்து கொள்ள எங்களுக்கு அருள் புரியுமாறு உன் திருவடி தொழுது வேண்டுகின்றோம்!

****

இணைப்புப் பாலம் :

மேலே கூறப்பட்டுள்ள திராவிட சமய இறைவேண்டலில், சைவம், வைணவம், யூதம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய ஐந்து மதங்களையும் இணைக்கும் இணைப்புப் பாலமாக இருப்பது "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்னும் திராவிடராகிய திருமூலரின் திருவாக்கு ஆகும்.

மூன்று நிலை :

மேலும் சிவன், எகோவா, அல்லா ஆகிய மூன்று பெயர்களும் கடவுளின் அருவ நிலையையும் அம்மை, விஷ்ணு, பரிசுத்த ஆவி, ரூகுல்லா, வார்த்தை, கலிமத்துல்லா என்பன கடவுளின் அருவுருவ நிலையையும் இயேசு, குமரக்கடவுள், பிள்ளையார், பிரமன், ஐயப்பன் ஆகிய ஐந்து பெயர்களும் கடவுளின் உருவ நிலையையும் விளக்குகின்றன.

புராணமும் வரலாறும் :

அருவ நிலை, அருவுருவ நிலை, உருவ நிலை ஆகிய மூன்று நிலைகளையும், சைவ சித்தாந்தமும் கிறிஸ்தவ இறையியலும் தெளிவாக விளக்குகின்றன. உருவ நிலையை, கடவுளின் மகன் (Son of God) என்ற நிலையில் குமரக்கடவுள், பிள்ளையார், பிரமன், ஐயப்பன் என்ற பெயர்கள் புராண நிலையிலும், இயேசு என்ற பெயர் வரலாற்று நிலையிலும் ஆன்மீக உண்மையை விளக்குகின்றன.

மதவெறி நீங்கினால் :

மதவெறியை நீக்கிவிட்டு உலகப் பெரும் மதங்களைக் கால வரலாற்று வழியில் ஒப்பிட்டு ஆய்கின்ற எந்த ஓர் ஆராய்ச்சியாளருக்கும் உலகில் இருப்பது ஒரு மதமே என்பதும், அதற்குப் பல பெயர்கள் என்பதும் அந்த ஒரு மதம் திராவிட

இன வரலாற்றில் வெளிப்படுவதால் அதன் பெயர் திராவிட மதம் என்பதே வரலாற்று வழியில் பொருந்தும் என்பதும் தெளிவாக விளங்கும்.

மூட நம்பிக்கை :

இவ்வளவு சிறப்புக்குரிய தெய்வீக இனமான திராவிட இனம் இன்று இந்தியாவில் இழிசாதி என்ற நிலையில் ஆரியர்களுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கிறது. தன்னுடைய கோவிலின் கருவறையில் கால் வைப்பதற்குத் தகுதியற்ற கீழ்சாதியில் பிறந்து விட்டதாக இன்றும் மனப்பூர்வமாக 'இந்துமதப் பக்தி' என்ற பெயரில் திராவிட இனம் நம்பிக் கொண்டிருக்கிறது. இது எவ்வளவு பரிதாபமான நிலையாகும்? இதை எண்ணிப் பார்க்கும் திராவிட அறிஞர்களின் கண்கள் கண்ணீரைச் சிந்தாமல் இருக்க முடியுமா? கண்ணீர் சிந்துவதோடு நின்று விடாமல் செயல்பாடுகளிலும் இறங்க வேண்டுமல்லவா?

ஆரிய வலையிலிருந்து :

முதலில் இந்த மூட நம்பிக்கை அகற்றப்பட வேண்டும். இதற்காக உருவாக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் பதவி ஆசையால் ஆரிய வலையில் சிக்கி இருக்கும் இன்றைய நிலையில், திராவிட அரசியல் கட்சிகளை ஆரிய வலையிலிருந்து விடுவித்து ஆகவேண்டியதிருக்கிறது.

ஒரே குறிக்கோள் - இன விடுதலை :

அதற்கான முயற்சியில் திராவிட இன விடுதலைக்காக உழைக்கக்கூடியவர்கள் அவர்கள் கடவுள் கொள்கையாளராக இருந்தாலும், கடவுள் மறுப்புக் கொள்கையாளராக இருந்தாலும் அந்த வேறுபாட்டை மறந்து விட்டு 'இனவிடுதலை' என்ற ஒரே குறிக்கோளில் ஒன்றிணைய வேண்டும்.

வெற்றி பெற வேண்டுமானால் வெளிப்படுத்த வேண்டும்

திராவிட அரசியல் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்து, வரும் தேர்தலில் அவர்கள் வெற்றி பெற வேண்டுமானால், திராவிட அரசியல் கட்சிகள் தங்கள் கொள்கைகளைக் கைவிடவில்லை என்பதை மக்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் வெளிப்படுத்த வேண்டும் என்பதை எடுத்துக் கூறவேண்டும்.

மாநாடு

''திராவிட மதக் கோவில்களில் திராவிடர்களே அர்ச்சகர்களாக ஆவதற்குரிய அத்தனை முயற்சிகளையும் மனப்பூர்வமாக எடுப்போம்" எனவும், "இந்துமதம் என்ற பெயரை நீக்கி அண்ணா, எம்.ஜி.ஆர் வழியில் 'திராவிட மதம்' என்று அறிவிக்கின்றோம்" என்றும் அவர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு செய்ய வேண்டும். அதற்கென்று ஒரு மாநாட்டைத் தேர்தலுக்கு முன்னர் கூட்டி, அம்மாநாட்டில் அவர்களை அறிவிக்க வைக்க முயற்சி எடுக்க வேண்டும்.

மதிப்பார்கள் :

அவ்வாறு அரசியல் கட்சிகள் அறிவித்தால் அவர்களைப் பற்றிய சந்தேகம் மக்களுக்கு அகலும். அவர்களோடு கூட்டுச் சேருகின்றவர்களும் அவர்களை மதிப்பார்கள்.

கடமை :

அறிவித்தவற்றை நடைமுறைப்படுத்த அவர்களைத் தூண்டுவது திராவிட இன விடுதலைக்காக ஒன்று சேர்ந்தவர்களுடைய கடமையாகும்.

இந்தியாவில் திராவிடர் ஆட்சி :

திராவிட இன விடுதலைக்காக ஒன்று சேர்ந்தவர்கள்

விழிப்பாயிருந்து இந்தியா முழுவதிலும் உள்ள திராவிட இனத்தலைவர்களை ஒன்று சேர்க்கும்பொழுது, இந்திய மக்களில் 88% இருக்கும் திராவிட மக்களுக்கு விடுதலையையும் மக்களாட்சி முறையில் திராவிட இந்தியாவின் ஆட்சிப்பொறுப்பில் திராவிடர்கள் மட்டுமே அமர முடியும், என்ற நிலையையும் எளிதாக ஏற்படுத்தி விடலாம். தேவை திராவிட இன விடுதலை உணர்வாளர்களின் ஒற்றுமையும் முயற்சியுமே.

வெற்றி உறுதி :

முதலில் திராவிட இன விடுதலை உணர்வாளர்கள் ஒன்று திரண்டு பின்பு மற்ற முயற்சிகளை மேற்கொண்டால் இறையருளால் இவர்களுக்கு வெற்றி உறுதியே. எவ்வாறென்றால் தென்னாடுடைய சிவனின் அருளே இதைச் செய்யத் தூண்டுகிறது. ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே! ஆகவே, திராவிட அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இறங்கி வருவார்களா? இதை ஏற்றுக் கொள்ளுவார்களா? அறிவிப்பார்களா? என்றெல்லாம் தயங்க வேண்டியதில்லை.

அவர்கள் இறங்கி வரவில்லை என்றால் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால், அறிவிக்க முன்வரவில்லை என்றால் பாதிப்பு அவர்களுக்கே தவிர திராவிட இன மக்களுக்கு அல்ல.

தென்னாடுடைய சிவனே போற்றி !

எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி !!

குறிப்பு :

வகுப்புகள் :

திராவிட இன வரலாறு, திராவிட சமய வரலாறு பற்றி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஆர்வமுள்ள அன்பர்கள் தொடர்பு கொள்ளலாம்.

ஆன்மீக விளக்கக் கூட்டங்கள் :

திராவிட ஆன்மீக இயக்கத்தின் சார்பாக ஆன்மீக விளக்கக் கூட்டங்கள் ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிறு மாலை 6 மணி முதல் 8 மணி வரை இயக்க அலுவலகத்தில் நடைபெற இருக்கிறது. இம்மாதம் 30ஆம் தேதி (30.05.'99) நடைபெறும். மதவெறியை நீக்கிய அன்பர்கள் பங்கு கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

அறிவிப்பு

இச்சிறிய நூல் தமிழில் எழுதப்பட்டுள்ளதாலும், தமிழ் நாட்டிலுள்ள ஆரியப் பிராமணர்களுக்குத் தலைமையிடமாக காஞ்சி சங்ரமடம் விளங்குவதாலும் ஆரியப் பிராமணர்களைப் பற்றி இச்சிறிய நூலில் நாம் வெளியிட்டிருக்கும் கருத்துகளை மறுக்க நினைக் கின்றவர்கள், ஒரு பல்கலைக்கழகத்தைத் தன்னகத்தே கொண்டுள்ள காஞ்சி சங்கரமடத்தின் வழி நம்மோடு தொடர்பு கொள்ள வேண்டுகின்றோம். அவர்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் கொடுக்க நாம் ஆயத்தமாய் இருக்கின்றோம். நாம் கேட்கும் கேள்விகளுக்கு பதில் கொடுக்க அவர்கள் முன்வர வேண்டும்.

14.10.'96 அன்று நாம் சங்கரமடத்திற்கு அனுப்பியிருந்த 108 கேள்விகளுக்கு இன்று வரை பதில் வரவில்லை என்பது நினைவுபடுத்தத்தக்கது.

இறையருள் கூட்டுவிப்பதாக.

– ஆசிரியர்.

எங்களிடம் கிடைக்கும் நூல்கள்

1) கடவுள் உண்டா – I
2) புற ஒளியும் அக ஒளியும் – II
3) God in Thirukkural
4) சிவஞானபோதம்
5) ஆதி அடைக்கலம் காத்த அம்மன் வரலாறு
6) திருக்குறள் புத்தாய்வு
7) விவிலியம் திருக்குறள் சைவசித்தாந்தம் – ஒப்பாய்வு
8) தமிழ் பக்தி இயக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும் (விவிலிய ஒளியில்)
9) Thirukkural and its central thought
10) 108 Questions to Sankara Mutt?
11) சங்கரமடத்திற்கு 108 கேள்விகள்
12) சங்கரமடத்தோடு போராட வேண்டியது ஏன்?
13) Christianity in Hinduism?
14) திராவிட சமய இதழ்கள் – தொகுப்பு